Literacy for a Billion

Movie: Thambi Udaiyaan
Year:

Song: Megam Karukkuthu
Lyricist:

மேகம் கருக்குது... ஓ...
மேக்கால இடிக்குது ... ஓ...
மழை வரப் பாக்குது... ஓ...
ஆத்துல தண்ணி வருது
ஆடுடா பாடுடா கொண்டாடுடா
அய்யனாருக்கு
வெட்டு நீ வெள்ளாடுடா
ஆடுடா பாடுடா கொண்டாடுடா
அய்யனாருக்கு
வெட்டு நீ வெள்ளாடுடா

ஜாதி மத பேதமில்லா
சொந்த மனசுடா
தள்ளிப்போன சந்தோஷம்
பக்கம் வருதுடா
எட்டிப்போன சொர்க்கமெல்லாம்
கிட்ட வருதுடா
காஞ்சுபோன மண்ணு
இங்க ஈரமாச்சு
கருத்துப்போன உடல்
இங்க வீரமாச்சு
கருத்துப்போன உடல்
இங்க வீரமாச்சு
ஆடுடா பாடுடா கொண்டாடுடா

அய்யனாருக்கு
வெட்டு நீ வெள்ளாடுடா
ஆடுடா பாடுடா கொண்டாடுடா
அய்யனாருக்கு
வெட்டு நீ வெள்ளாடுடா

மாயாண்டி முனியாண்டி
மம்முட்டி எடுப்பாண்டி
கரைவெட்டி தள்ளிவிட்டு
கழனியில உழைப்பாண்டி
மாரியம்மா காளியம்மா
மனங்குளிர வந்திடுவா
மச்சானுக்கு கஞ்சி கொண்டு
மருதாயி வந்திடுவா
கடிச்சிக்க பச்ச மிளகா
கரிசனமா தந்திடுவா
மந்தையில மச்சானை
மார்மேல சாய்ச்சுக்குவா
ஆடுடா பாடுடா கொண்டாடுடா
அய்யனாருக்கு
வெட்டு நீ வெள்ளாடுடா
ஆடுடா பாடுடா கொண்டாடுடா
அய்யனாருக்கு
வெட்டு நீ வெள்ளாடுடா

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.

PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.